# I PRIZE – SAMIDASSE, Murungapakkam, Puducherry

## ஒரே ஒரு பூமி!

உயிர்களுக்கெல்லாம் சாமி,
எங்கள் உயிர் பூமி!
கடினங்கள் பாராது, உருளும் உலகமே!
கதிரவனின் மூன்றாவது மகளின் உருவமே!
வையகத்தின் தாயாக இருப்பவளே!
பிறந்து வந்தோரை வாழ வைக்கும் குணம் கொண்டவளே!
நீலமும், பச்சையும் நிறம் கொண்ட அழகுள்ளவளே!
உன்னை சுற்றி அழகு பார்க்கும்,
நிலவின் வடிவம் கொண்டவளே!
ஒரே ஒரு பூமி நீ மட்டும்தான்!
நீ செய்யும் தொண்டுகள்,
வார்த்தைகளால் வர்ணிக்கப்படுபவை அல்ல!
வாழும் காலம் வரை,
உயிரில் உணரப்படுபவை!
நீ மண்ணுலகில் மழை வேண்டி,
தன்னைதானே சுற்றி அங்கபிரதட்சனை செய்கிறாய்!
ஒளிவேண்டி, கதிரவனை ஓய்வின்றி சுற்றுகிறாய்!
காற்றினை மாசற்ற நிலை பெற,
அசுத்த காற்றை சுவைக்கிறாய்,
தூய காற்றை வையகத்தில் அளிக்கிறாய்.
இயற்கை வளங்களின் பசுமை பூமி நீ!
உயிர்களின் பசியும், தாகமும் தணிக்கும் பூமி நீ!
உன்னையறிந்தும், உண்மை தெரிந்தும்,
செய்யும் கொடுமை...ஐயஹோ சொல்லி மாலாது,
இயற்கை மரங்களை வெட்டிக்கொலை செய்தல்,
மக்காத காகிதத்தினால் பூமி உனக்கு மூச்சுத்திணரல்,
ரசம் போல் நீரில் கலக்கும் இரசாயணம்,
விஷத்தை பருக செய்யும் மானிடப்பிறவிகள்,
கரும்புகை காற்றினால் பூமி உனக்கு மாசுவெப்ப சலனம்,
பூமி தாயே எதையும் சகிக்கும் தன்மை உனக்கு,
பெற்ற தாய் அவளுக்கு முதியோர் இல்லம்,
உன்னை மறந்த மானிடனுக்கோ வேற்று கிரகம்.
உன்னை நிலைகுலைய செய்தது விஞ்ஞான வளர்ச்சி,
அதன் விளைவு வேற்று கிரகம் செல்லும் முயற்சி,
நோயுற்ற பூமி என உனை அப்படியே காணாமல் விட்டனர்,
வேற்று கிரகம் செல்ல ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்,
நன்றி மறந்த மானிடனை கண்டு என் இதயம் கலங்குகின்றது,
பிறந்தாலும்! இருந்தாலும்! இறந்தாலும்!
இனி நான் பூமிதாய் உன் மடியில்தான்.

## II PRIZE – Malliga Gopal, Iyankuttipalayam, Puducherry

### <u>தவறுகளைத் திருத்து தரணியை உயர்த்து</u>

செயற்கைக் கவர்ச்சிக்கு மயங்கி
இயற்கையை மறந்தோமே
நியாயமா?

மண்ணின் மகிமை அறியாமல்
கண்ணான பூமியை
அழிக்கலாமா?

பொன்னான புவியை காக்காமல்
மண்ணோடு மண்ணாய்
புதைக்கலாமா ?

இளமையில் உணர்ந்து செயல்படாமல்
முதுமையில் வருந்தி
வாடலாமா ?

அப்போதே அறிந்து எழுந்திடாமல்
இப்போது புரிந்து
தேடலாமா?

கற்றதன் பயனை வீணாக்காமல்
கல்லாமை உணர்வில்
நிற்கலாமா?

கேள்விகளைத் தொடர்ந்து தொடுத்தவிட்டு
பதில்களைத் தேடாமல்
இருக்கலாமா ?

கார்மேகம் பொழிமழையை காக்காமல்
நீர்நிலைகள் நிலைக்குமமென்றால்
சரிப்படுமா ?

நிற்காமல் சுழலும் பூமிப்பந்தை
எக்காலமும் சிறப்பாய்ப்
பேணலாமே!

## III PRIZE – Thirumurugan, Muthialpet, Puducherry

ஒரே ஒரு பூமி

புண்ணியம் போற்றிவரும் புகழ்மிகு புதுவைமண்ணில்
இன்தமிழின் இசையோடு கவிமாலைத் தொடுக்கின்றோம்
எவ்வுயிர்க்கும் உணவளிக்கும் இயற்கை அன்னையே
பொறுமைக்கும் பெருமைக்கும் சான்றான புகழ்வடிவே

நிலம்அதிலே நீர்சேர்ந்து பயிராகும் பசுமையிலே
ஆகாயம் காற்றுடனே சுடுநெருப்பும் சூழ்ந்திங்கே
பூமிதன்னை சுழற்றிடவே உழைக்கின்றோம் உலகினிலே
இயற்கைதந்த அன்பாலே நன்மையெல்லாம் பெறுகின்றோம்

மெய்ஞானம் அறிவித்தும் விஞ்ஞான வேட்கையிலே
நலமழிக்கும் கழிவுகளை நாள்தோறும் குவிக்கின்றோம்
சுற்றுச்சூழல் வளம்சுரண்டி மாசுபடுத்தி வாழ்கின்றோம்
புவிவெப்பம் கடல்சீற்றம் நிலநடுக்கம் காண்கின்றோம்

ஒரேஒரு பூமிதன்னில் உலகமக்கள் சேர்ந்திங்கே
ஒற்றுமையாய் உறுதியேற்றால் முடியாதது எதுவுமில்லை
மாசில்லா மனம்போலே உலகெங்கும் வளம்பொங்க
இயற்கைதன்னை நேசித்தே இனிதாய்நாளும் வாழ்ந்திடுவோம்

வளம்சேர்க்கும் மழைபொழிய மரம்வளர்ப்போம் பூமியெங்கும்
மாசற்றகாற்றாலே நித்தம் மனிதவாழ்வின் நலம்பெறுவோம்
உள்ளச்சபதம் ஏற்றிடுவோம் சுற்றுச்சூழல் காத்திடுவோம்
வாழ்விக்கும் புவிதன்னை நாள்தோறும் போற்றிடுவோம்

உலகிலுள்ள அனைத்துயிரும் இயற்கைதந்த கொடைதானே
நன்றியென்றும் மறவாமல் இயற்கையன்னை மகிழ்ந்திடவே
கடமைதன்னை அன்போடு கருத்தாய்நாளும் செய்திடுவோம்
மணம்வீசும் சமுதாயம் மகத்தாய்வாழும் வழிசெய்வோம்

மழைநீரை சேமிப்போம் நீர்நிலைகளை பராமரிப்போம்
வனங்களை வளர்த்திடுவோம் வனவிலங்கிற்கும் வாழ்வளிப்போம்
நிலம்நீர் நெருப்பு காற்றுஆகாயமெனும் பஞ்சபூதங்கள்
மகிழ்நிதிடவே மகிழ்வான உலகம் படைத்திடுவோம்

பண்புடன்பணிவாய் பணிசெய்வோம் பயன்களெல்லாம் அடைந்திடுவோம்
அன்பெனும்வழியில் நடந்திடுவோம் அகிலமெல்லாம் செழித்திடவே
மனிதநேயம் செழித்திடவே மக்களெல்லாம் மனங்கொள்வோம்
யாவரும்பூமியில் புகழுடனே வளமிகுவாழ்வினில் வாழ்ந்திடுவோம்